வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 23.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

தீவிரவாதம், மாவோயிசம் போன்ற வன்முறை எதையும் சகித்துக் கொள்ள முடியாது என்பதே, அரசின் கொள்கை என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தீவிரவாதிகள் மீதான இந்தியாவின் தாக்குதலை, பாகிஸ்தான் மீதான தாக்குதல் போல் அந்நாடு சித்தரிப்பதாக, மத்திய உள்துறை அமைசசர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து, மத்திய அரசால் அமைக்கப்பட்ட, 7 அனைத்து கட்சிக் குழுக்களில், முதல் 3 குழுவினர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில், பல்வேறு தரப்பினரை சந்தித்து வருகின்றனர்.

புதுச்சேரியில், குரும்பாபேட் பால் பண்ணை வளாகத்தில் 20 ஆயிரம் லிட்டர் உற்பத்தி திறனுடன் பாண்லே ஐஸ்கிரீம் உற்பத்தி கூடம் நிறுவும் பணிகளுக்கு இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி அடிக்கல் நாட்டினார்.

------------------------

மோடி-வடகிழக்கு 1 (5)

தீவிரவாதம், மாவோயிசம் ஆகிய வன்முறை எதையும் சகித்துக் கொள்ள முடியாது என்பதே அரசின் கொள்கை என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், எழுச்சி மிகு வடகிழக்கு மாநிலங்களுக்கான முதலீட்டாளர் உச்சி மாநாட்டை தொடக்கி வைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். பிரதமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்.....

மோடி-வடகிழக்கு 2 (17)

<u>இந்தியா முன்னேற, வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சி அவசியம் என்பதால், வாய்ப்புக்களின் கேந்திரமாக மேம்பட்டு வரும் வடகிழக்கு மாநிலங்கள் மீது முதலீட்டாளர்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என</u>

பிரதமர் தமது உரையில் கேட்டுக் கொண்டார். முன்பு, தொலைதூர எல்லைப் பிராந்தியமாக கருதப்பட்ட வடகிழக்கு மாநிலங்கள் தற்போது, வளர்ச்சியில் முன்னிலை வகிப்பதாகவும், குறிப்பாக, எரிசக்தி, செமிகண்டக்டர் உள்ளிட்ட துறைகளுக்கான முக்கிய முதலீட்டு மையமாக இப்பிராந்தியம் மேம்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். மூங்கில், தேயிலை, பெட்ரோலியம் உள்ளிட்ட துறைகளின் மறு பெயராகவே திகழும் வடகிழக்கு மாநிலங்களில், சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கும் அதிக வாய்ப்புகள் இருப்பதாக அவர் சுட்டிக் காட்டினார்.

வடகிழக்கு பிராந்தியத்தில், போக்குவரத்து தொடர்புகளை மேம்படுத்த, அரசு பல்லாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்து இருப்பதாகவும், கடந்த 10 ஆண்டுகளில், இப்பகுதியில், 11 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகளும், புதிய ரயில் பாதைகள் மற்றும் நீர்வழிப் பாதைகளும் அமைக்கப்பட்டு, விமான நிலையங்களின் எண்ணிக்கை, இரட்டிப்பாக்கப் பட்டுள்ளதாகவும், பிரதமர் கூறினார். ஆயிரத்து 600 கிலோ மீட்டர்

மோடி-வடகிழக்கு 3 (6)

நீளத்திற்கு வடகிழக்கு எரிவாயு கட்டமைப்பு நிறுவப் பட்டுள்ளதால், தொழில் துறையினருக்கு தடையின்றி எரிசக்தி கிடைக்க ஏதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

8 வடகிழக்கு மாநிலங்களின் வாய்ப்புக்களை உலகிற்கு எடுத்துக் கூறும் வகையில், அண்மையில் புதுடெல்லி பாரத் மண்டபத்தில், அஷ்டலட்சுமி மகோத்சவம் நடத்தப் பட்டதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

மோடி-வடகிழக்கு 4 (6)

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான மத்திய அமைச்சர் திரு. ஜோதிர்ராதித்யா சிந்தியா உள்ளிட்டோர் வடகிழக்கு முதலீட்டாளர் உச்சி மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். பல்வேறு துறைகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள், மற்றும், கொள்கை வகுப்பாளர்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வரும் வகையில், மத்திய அரசு இந்த 2 நாள் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

-----------------------

அமித் ஷா (15)

தீவிரவாதிகள் மீதான இந்தியாவின் தாக்குதலை, பாகிஸ்தான் மீதான தாக்குதல் போல் அந்நாடு சித்தரிப்பதாக, மத்திய உள்துறை அமைசசர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். தீவிரவாதத்தை பாகிஸ்தான் ஆதரிப்பதற்கு,

இதுவே சான்றாகும் என்று அவர் இன்று புதுடெல்லியில், எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கான விருது வழங்கும் விழாவில் பேசுகையில் கூறினார். பாகிஸ்தான் ராணுவம், இந்தியாவின் சிவிலியன் மற்றும் ராணுவ நிலைகளை தாக்க முயன்ற போது, இந்திய ராணுவம் வலுவாக பதிலடி கொடுத்து, பாகிஸ்தானிய விமான தளங்களை தாக்கியதன் மூலம், தனது திறன்களை நிரூபித்து இருப்பதாக, அவர் தெரிவித்தார்.

பகல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு இந்தியா கொடுத்த பதிலடிதான் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை என்றும், இந்தியப் படைகளின் துணிச்சலை, தற்போது உலகமே பாராட்டுவதாகவும், மத்திய உள்துறை அமைச்சர் குறிப்பிட்டார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றிக்கு, அரசின் வலுவான மன உறுதியும், சரியான உளவுத் தகவல் மற்றும் பாதுகாப்புப் படைகளின் திறன்களுமே காரணம் என்று, அவர் மேலும் கூறினார்.

------------------------

*அனைத்துக் கட்சி குழு* (18)

**ஆபரேஷன் சிந்தூர்** நடவடிக்கை பற்றிய, இந்தியாவின் **தூதரகப் புறவீச்சு** முயற்சிகளின் கீழ், அரசால் அமைக்கப்பட்டுள்ள, 7 அனைத்து கட்சிப் பிரதிநிதிக் குழுக்களில், திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி தலைமையிலான 3-ஆவது குழுவினர், 5 நாடுகளுக்கு பயணத்தின் முதல்கட்டமாக, தற்போது ரஷ்யா சென்றுள்ளனர். மாஸ்கோவில் ரஷ்ய தலைவர்களை சந்தித்து, தீவிரவாதம் பற்றிய இந்தியாவின் நிலைகளை எடுத்துக் கூறிய பின்னர், ஸ்பெயின், கிரீஸ், ஸ்லோவீனியா, லட்வியா ஆகிய நாடுகளுக்கும், இவர்கள் செல்கின்றனர். இதற்கிடையே, ஜேடியு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சஞ்சய் ஜா தலைமையிலான அனைத்துக் கட்சி பிரிவினர், இன்று டோக்யோவில் ஜப்பானிய தலைவர்களை சந்தித்து, இந்தியாவின் நிலைப்பாடுகளை எடுத்துக் கூறினர். பிரேசில், ஆஸ்திரேலியா, கொலம்பியா உள்ளிட்ட நாடுகளின் தூதர்களையும், டோக்யோவில் இவர்கள் சந்தித்தனர். சிவசேனா எம்.பி. டாக்டர் ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழுவினர், இன்று அபுதாபியில், இதேபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள 7 அனைத்துக் கட்சிக் குழுக்களில், எஞ்சி உள்ள குழுக்கள், வரவிருக்கும் நாட்களில், பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும்.

------------------------

*□ாண்லே* 1 (10)

புதுச்சேரியில், குரும்பாபேட் பால் பண்ணை வளாகத்தில் 20 ஆயிரம் லிட்டர் உற்பத்தி திறனுடன் பாண்லே ஐஸ்கிரீம் உற்பத்தி கூடம் நிறுவும் பணிகளுக்கு இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி அடிக்கல் நாட்டினார். பழமையான கூட்டுறவு அமைப்பான பாண்லே நிறுவனத்தில் உற்பத்தியாகும் பால் பொருட்கள், மக்களிடையே மிகுந்த நம்பிக்கை பெற்றவை என்றும், இந்நிறுவனத்தின் உற்பத்தியை பெருக்க, ஊழியர்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். புதுச்சேரி அரசு கடந்த 4 ஆண்டுகளில், 4 ஆயிரம் காலிப் பணியிடங்களை நிரப்பி இருப்பதாகவும், அடுத்த 6 மாதங்களுக்குள் மேலும் ஆயிரம் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்…..

□ாண்லே 2 (5)

ஐஸ் கிரீம் உற்பத்திக் கூடத்தின் அடிக்கல் நாட்டு விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார், தேசிய பால்வள வாரியத்தின் தலைவர் டாக்டர் மீனேஷ் ஜா, தலைமைச் செயலர் டாக்டர் சரத் சௌகான் மற்றும் இதர அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

------------------------

*□ரம் வீர் சக்ரா 1 (7)*

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1971ஆம் ஆண்டு, இந்தோ-பாக் போரின் போது நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்து, பரம்வீர் சக்ரா விருது பெற்ற, செகண்ட் லெப்டினென்ட் அருண் கேத்தரபால் குறித்து ஒரு தொகுப்பு …..

*□ரம் வீர் சக்ரா* 2 (18)

1950ஆம் ஆண்டு, மஹாராஷ்ட்ர மாநிலம் புனேயில் பிறந்தவரான செகண்ட் லெப்டினென்ட் அருண் கேத்தரபால், 1971ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், புனா குதிரைப் படைப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப் பட்டவர் ஆவார். 1971ஆம் ஆண்டு இந்தே-பாக் போரின் போது, வெறும் 21 வயதிலேயே இணையற்ற துணிச்சலை அவர் வெளிப்படுத்தினார். அவ்வாண்டு டிசம்பர் 16ஆம் தேதி, ஷக்கர்கார் பிரிவில் உள்ள ஜர்ப்பால் பகுதியைக் குறி வைத்து, புகைமூட்டத்தின் உதவியுடன், எதிரிப் படையினர்

மேற்கொண்ட எதிர்த் தாக்குதலின் போது, இந்தியப் படையினரின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால், அங்கிருந்த படைப் பிரிவின் தலைவர், கூடுதல் படைகளின் ஆதரவைக் கோரினார். செகண்ட் லெப்டினென்ட் அருண் கேத்தரபால், 2 பீரங்கி வண்டிகளுடன் அருகிலேயே இருந்ததால், உடனடியாக உதவிக்கு சென்றார். அவ்வாறு செல்லும் வழியில் எதிரிகளின் வலுவான நிலைகளில் இருந்து தாக்குதலுக்கு ஆளான போதிலும், அவர் எதிரி நிலைகளுக்கு வலுவான பதிலடி கொடுத்து, பல்வேறு பாதுகாப்பு அரண்களை மீறி, எதிரிப் படையினர் பலரை சிறைப் பிடித்தார். இத்தாக்குதலின் போது, கேத்தரபாலோடு உடன் இருந்த 2ஆவது பீரங்கி வண்டியின் கமாண்டர் கொல்லப் பட்டதால், அவர் தனித்து விடப்பட்டார். அதன் பின்னரும்,

□ரம் வீர் சக்ரா 3 (16)

கேத்தரபால், தனியொரு ஆளாகவே கடைசி வரை போராடி, எதிரிகளின் அனைத்து நிலைகளையும் அழித்து அகற்றினார். தொடர்ந்து உதவி கோரிய இந்தியப் படையினரின் நிலைக்கு அவர் விரைந்து, அங்கும், எதிரிகளின் பீரங்கி வண்டி ஒன்றை தாக்கி அழித்தார். எதிரிப் படையினர் மேலும் பல பீரங்கி வண்டிகளுடன் மீண்டும் தாக்கிய போது, இந்தியப் படையினர் எதிரிகளின் 10 பீரங்கி வண்டிகளை தாக்கிஅழித்தனர். இதில் 4 பீரங்கி வண்டிகளை கேத்தரபால் மட்டுமே தாக்கி அழித்தார். கேத்தரபாலின் பீரங்கி வண்டி, எதிரிப் படைகளால் சுடப்பட்டு வெடித்து, தீப்பற்றிய நிலையிலும், அவர் தாக்குதலை நிறுத்தாமல் தொடர்ந்து போராடிய நிலையில், பீரங்கி வண்டி மீண்டும் தாக்கப் பட்டதில், அவர் உயிர்த் தியாகம் செய்ய நேரிட்டது. ஆயினும், எதிரிப் படைகள் விரும்பிய திருப்பு முனை, கடைசி வரை அவர்களுக்கு கிடைக்கவில்லை. எதிரிப் படையினருடனான நேருக்கு நேர் மோதலில், இத்தகைய அபார வீரத்தை வெளிப்படுத்தியதற்காக, செகண்ட் லெப்டினென்ட் அருண் கேத்தரபாலுக்கு, மரணத்திற்கு பிந்தைய முறையில், பரம் வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது. அவரது துணிச்சலுக்கு நாடு தலை வணங்குகிறது.

------------------------

வானிலை (18)

தென்மேற்கு பருவமழை, கேரளத்தில் அடுத்த 2 நாட்களில் தொடங்கி, தமிழகத்தின் சில பகுதிகளுக்கு பரவ வாய்ப்புகள் உள்ளதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கு அரபிக் கடலில், நேற்று நிலவிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, இன்று காலை, ஆழ்ந்த

காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுவடைந்துள்ளது. இது வடக்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என எதிர் பார்க்கப் படுகிறது. இது அல்லாது வரும் 27ஆம் தேதி வாக்கில், மத்திய மேற்கு வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்திலும், புதுச்சேரியிலும், மேலும் சில நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பலத்த சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு இருப்பதால், தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

------------------------

*ஐபிஎல்* (4)

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று மாலை 7.30 மணிக்கு, லக்னோவில் நடைபெறும் போட்டியில், பெங்களூர்-ஹைதராபாத் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு அகமதாபாத்தில் நடைபெற்ற போட்டியில், லக்னோ அணி, 33 ரன் வித்தியாசத்தில், குஜராத் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

------------------------

*காரைக்கால்* (6)

காரைக்காலில் சனீஸ்வரர் சன்னிதியை உள்ளடக்கிய திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோவில் பிரம்மோற்சவம், கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது. நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் திரு. சோம சேகர அப்பாராவ், தர்மபுர ஆதீனம் கட்டளை விசாரணை கந்தசாமி தம்பிரான் சுவாமிகள், திருக்கோவில் நிர்வாக அதிகாரி திரு. அருணகிரிநாதன் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து பஞ்ச மூர்த்திகள் வீதியுலா நடைபெற்றது.

------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தீவிரவாதம், மாவோயிசம் போன்ற **வன்முறை எதையும் சகித்துக் கொள்ள முடியாது** என்பதே, அரசின் கொள்கை என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தீவிரவாதிகள் மீதான இந்தியாவின் தாக்குதலை, **பாகிஸ்தான் மீதான தாக்குதல் போல்** அந்நாடு சித்தரிப்பதாக, மத்திய உள்துறை அமைசசர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

**ஆபரேஷன் சிந்தூர்** நடவடிக்கை குறித்து, மத்திய அரசால் அமைக்கப்பட்ட, 7 அனைத்து கட்சிக் குழுக்களில், முதல் 3 குழுவினர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில், **பல்வேறு தரப்பினரை சந்தித்து வருகின்றனர்.**

புதுச்சேரியில், குரும்பாபேட் பால் பண்ணை வளாகத்தில் 20 ஆயிரம் லிட்டர் உற்பத்தி திறனுடன் **பாண்லே ஐஸ்கிரீம் உற்பத்தி கூடம்** நிறுவும் பணிகளுக்கு இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி அடிக்கல் நாட்டினார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**